DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : மரு.மீரா | Father/Husband Name : கணேஷ்பாபு |
| Age : 53 | Village : திருவில்லிபுத்தூர் |
| Taluk : | Calling : மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22 July 2025

(Accused Present)

<u>**முதல் விசாரணை :-**</u>

1. நான் தற்போது ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 03.12.2018ம் தேதி காலை 7மாத கர்ப்பிணியான [redacted] (அ.சா.1), க/பெ.[redacted] என்பவர் மூச்சுவிட சிரமமாக இருக்கிறது என்று மருத்துவமனைக்கு வந்தார். அவரை பரிசோதித்த போது, அவருக்கு இரத்தசோகை இருப்பதை அறிந்து, அவருக்கு இரத்தம் செலுத்த அறிவுறுத்தினேன். அதன் பின்னர் அவரை உள்நோயாளியாக சேர்த்தேன். மேற்படி [redacted] (அ.சா.1) என்பவரின் உடலிலிருந்து மாதிரிக்காக இரத்தத்தை எடுத்தேன். [redacted] (அ.சா.1) என்பவருக்கு O+ இரத்தம் என்பதால் சிவகாசி அரசு மருத்துவமனையில் இருந்து 1யூனிட் இரத்தத்தை வாங்கிவர பரிந்துரை சீட்டுடன் [redacted] (அ.சா.1)வின் இரத்தம் அடங்கிய குப்பியையும் கொடுத்தேன்.

3. 03.12.2018ம் தேதி மதியம் 01.30 மணிக்கு நான் என்னுடைய பணியை முடித்து சென்றுவிட்டேன். நான் சென்ற பிறகு பணியில் இருந்த மருத்துவர், செவிலியரிடம் கொடுத்து [redacted] (அ.சா.1)வின் உடலில் இரத்தத்தை ஏற்றியுள்ளார். [redacted] தொடர்ந்து 2 நாட்கள் சிகிச்சையிலிருந்து, அவருக்கு இரத்தம் ஏற்றியதிலிருந்து 48 மணி நேரம் கழித்து மீண்டும் இரத்த பரிசோதனை செய்தேன். அவருடைய உடல்நிலை சீராக இருந்ததால் அவரை 05.12.2018ம் தேதி மருத்துவமனையிலிருந்து விடுவித்தேன். என்னிடம் காட்டப்படும் [redacted] (அ.சா.1) என்பவரின் மருத்துவ சிகிச்சை குறிப்புகள் மற்றும் அவர் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டது தொடர்பான அறிக்கை என்னால் வழங்கப்பட்டதாகும். (<u>**05.06.2018ம் தேதி 03.12.2018ம் தேதி வரை [redacted] (அ.சா.1) என்பவருக்கான மருத்துவ சிகிச்சை குறிப்புகளின் உண்மை நகல் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**</u>). [redacted] (அ.சா.1) 03.12.2018ம் தேதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, அவருக்கு HIV பாதிப்பு எதுவும் இல்லை.

4. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – (இல்லை)**</u>

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur.